# நிர்வாக சுருக்கம்

இந்த ஆய்வு இலங்கையில் நல்லிணக்கம் பற்றிய பொது விவாதத்தை அறிவிப்பதற்கான ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றை மக்களிடம் கொண்டுசேர்த்தல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கிய இலங்கையின் ஆராய்ச்சியைப் பாராட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. இந்த இலங்கையின் ஆராய்ச்சியானது நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் திட்டம் (SRP), நீதி மற்றும் நல்லிணக்க நிறுவனம் (IJR), தென்னாபிரிக்கா மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA), இலங்கை என்பவற்றை உள்ளடக்கிய கூட்டமைப்பினால் வழிநடத்தப்படுகிறது. நல்லிணக்கம் மற்றும் அதை நோக்கிய முன்னேற்றம் குறித்த புரிதல் மற்றும் எதிர்பார்ப்புகளை ஆழமாக்குவது தொடர்பான ஆராய்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக இலங்கையிலுள்ள பல்வேறு பங்குதாரர்களை இணைத்துக்கொள்வதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும். ***போருக்குப் பிந்தைய இலங்கையில் இளைஞர்களின் அடையாளம் மற்றும் சொற்பொழிவுகள்*** என்ற தலைப்பிலான இந்த ஆய்வுக் கட்டுரையானது அடையாளம், கலை, சமூக ஊடகங்கள், மோதல்கள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான இடைத்தொடர்பினை ஆராய்வதற்கான ஒரு முயற்சியாகும். இந்த ஆய்வு, இளைஞர்கள் மத்தியில் அடையாளத்தினை உருவாக்கும் செயல்முறையையும் தேசியவாதம் மற்றும் பெரும்பான்மை மேலாதிக்க சொற்பொழிவுகள் மற்றும் அவற்றுடன் இணைந்து காணப்படும் மாற்று மற்றும் சிறுபான்மை சொற்பொழிவுகள் ஆகியவற்றின் மீதான இளைஞர்களின் செயற்பாடுகளையும் ஆராய்கிறது. இத்தகைய செயல்முறைகளை ஆராய்வதில் இந்த ஆய்வு, 2019ம் ஆண்டின் பிற்பகுதி மற்றும் 2020ம் ஆண்டின் முற்பகுதிக்கிடையில் நடைபெற்ற சுவரோவிய அலையைப் பார்த்தது, மேலும் பௌதிக இடைவெளிகள் மற்றும் இடங்களையும் தாண்டி மெய்நிகர் (virtual) தளங்களிலும் இருக்க முடிந்தது.

இந்த ஆய்வுக்கட்டுரையானது விமர்சன உரையாடல் பகுப்பாய்வு முறையை தரவு பகுப்பாய்வு முறையாகப் பயன்படுத்தியுள்ளது. பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவு அவர்களின் நிகழ்ச்சி நிரல் அமைக்கும் செயற்பாடு மற்றும் பெனடிக்ட் ஆண்டர்சனால் புரிந்துகொள்ளப்பட்டதன்படி அடையாளத்தினை உருவாக்குதல் மற்றும் செயல்திறன் தொடர்பாக பார்க்கப்பட்டது. இந்த ஆய்வை நடத்துவதற்காக, சுவரோவிய அலை (ட்விட்டர் மற்றும் பேஸ்புக்கில்) தொடர்பான சமூக ஊடக பதிவுகளை மதிப்பாய்வு செய்தல், 10 முக்கிய நபர்களின் நேர்காணல்கள், நான்கு விரிவான நேர்காணல்கள் மற்றும் ஒன்பது நிபுணர்களின் நேர்காணல்கள் என்பவை மேற்கொள்ளப்பட்டன.

சுவரோவிய அலையினுள் காணப்பட்ட ஏனைய சொற்பொழிவுகளில் ஆதிக்கம் செலுத்திய ஒரு தெளிவான சொற்பொழிவு இருப்பதை ஆய்வின் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்தின. இந்த மேலாதிக்க கதை இன தேசியவாதம், வெற்றிவாதம் மற்றும் இராணுவமயமாக்கல் ஆகியவற்றால்

வகைப்படுத்தப்பட்டது. சுவரோவியங்களில் காணப்படும் மூலக்கருத்துக்கள் மற்றும் பொருட்கள், மற்றும் பதிலளிப்பவர்களின் கலந்துரையாடல் நடைமுறைகள் என்பவை இந்த சொற்பொழிவுகள் சிங்கள பௌத்த உணர்வுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன என்பதனை சுட்டிக்காட்டின. சுவரோவிய அலையினுள் காணப்பட்ட சிறுபான்மை மற்றும் மாற்றுச் சொற்பொழிவுகளில் அமைதி, ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் இந்தக் கட்டுரையில் ஆய்வு செய்ய இடம் இல்லாத கடைசி மூன்று பகுதிகளான பிரபலமான கலாச்சாரம், சுற்றுச்சூழல் மற்றும் ராவணா/ராவணன் பற்றிய குறிப்புகள் என்பவை அடங்கும். சொற்பொழிவின் பகுப்பாய்வு, சுவரோவியங்களின் உள்ளடக்கங்கள் அவற்றின் இடம் மற்றும் அந்த இடத்தில் வசிக்கும் சமூகத்திலிருந்து வேறுபட்டது என்பதை மேலும் வெளிப்படுத்தியது. சிங்கள பெரும்பான்மை பிரதேசங்களில் வரையப்பட்ட சுவரோவியங்கள் முன்னர் குறிப்பிடப்பட்ட மேலாதிக்க கதைகளை உள்ளடக்கியிருந்த அதேவேளை, தமிழ் பெரும்பான்மையான பகுதிகளில் வரையப்பட்ட சுவரோவியங்களில் உள்ளூர் கலாச்சாரம் மற்றும் சகவாழ்வின் முக்கியத்துவம் தொடர்பான படங்கள் இருந்தன.

இளைஞர் குழுக்கள் மற்றும் ஓவியர்களுடனான நேர்காணல்கள் சுவரோவிய அலையின் தோற்றப் புள்ளிகளின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகின்றன. 2019 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் சுவரோவிய அலைக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ ஆதரவளித்தார் என்பதனை சமூக ஊடக மதிப்பாய்வு வெளிப்படுத்தியிருந்தாலும், கலைஞர்கள் சுவரோவிய அலையின் தோற்றம் எந்த அரசியல் உள்நோக்கமும் அற்றது என்பதனையும், இது தேவையற்ற சுவரொட்டிகள் மற்றும் விலைபட்டியல்களினால் மாசுபடுத்தப்பட்டிருந்த நகரங்களை அழகுபடுத்துவதையே முற்றிலும் நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதையும் தெரிவித்தனர். அரசியல்மயமாக்கப்பட்ட இந்த இயக்கம், கடந்த ஆட்சியின் போது கருத்துச் சுதந்திரம் தொடர்பாக ஒடுக்கப்பட்டதாக உணர்ந்த தேசப்பற்றுள்ள இளைஞர்களுக்கு அரச ஆதரவை வழங்கியது. இத்தகைய அரச அனுசரணையுடன், இந்த தேசப்பற்றுள்ள இளைஞர்கள் பொது வெளிகளையும், இடங்களையும் சிங்கள பௌத்த, வெற்றிக் காட்சிகளால் அலங்கரித்து, அரசினால் வகுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை, பொது இடங்களை "அழகுபடுத்துதல்" மூலமாக சிங்கள பௌத்த, வெற்றிகரமான கதையை நிலைநிறுத்துகின்றனர். சிறுபான்மை சொற்பொழிவுகளை ஒடுக்குவதில் அரசின் நிகழ்ச்சி நிரல் நீட்டிக்கப்பட்டுள்ளது, மேலும் தமிழ் இளைஞர்கள் அவர்கள் விரும்பியதை சுவர்களில் வரைவதற்கு அதிகாரிகள் மறுத்துவிட்டனர் என்ற பிரதிவாதியின் வெளிப்பாட்டினூடாக இது தெளிவாகிறது. உள்ளடக்கம் தணிக்கை செய்யப்பட்டு அதிகாரிகளாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டது. சுவரோவிய அலை இளைஞர்கள் பாலினத்தை உணர்ந்து செயல்படும் வழிகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. சமூக ஊடக மதிப்பாய்வு மற்றும் நேர்காணல் செய்யப்பட்டவர்களின் தர்க்கரீதியான நடைமுறைகள் என்பவை பொதுமக்கள் இராணுவமயமாக்கப்பட்ட ஆண்மையின் செயல்திறனைக் கொண்டாடினர் என்பதையும், இறுதியில் சுவர்களில் இராணுவ வீரர்களை சித்தரிப்பதன் மூலமாக பொது இடங்கள் மேலும் இராணுவமயமாக்கப்படுவதற்கு அனுமதியளித்தனர் என்பதனையும் வெளிப்படுத்தின.

சுவரோவிய அலை பற்றிய உரையாடல்கள் சமூக ஊடகங்களிலும் காணப்பட்டன. தொற்றுநோய் காரணமாக சுவரோவிய அலை மூடப்பட்டமை மற்றும் பௌதிக நடமாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை என்பவற்றின் விளைவாக இந்த திட்டத்தின் தொடர்ச்சி சமூக ஊடகங்களுக்கு மாற்றப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட தரவுகள், நேரடியான சுவரோவிய அலையில் காணப்பட்ட ஒருங்கிணைந்த பிரதிநிதித்துவம் சமூக ஊடகங்களில் காணப்படவில்லை என்பதையும் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட பெரும்பாலான சுவரோவியங்கள் மற்றும் அவற்றைப் பற்றிய உரையாடல்கள் நேரடி சுவரோவிய அலைக்குள் காணப்பட்ட சிங்கள பௌத்தம், இனதேசியவாதம் மற்றும் வெற்றிவாதம் ஆகிய மேலாதிக்க சொற்பொழிவுகளை பற்றியதாகவே இருந்தன என்பதையும் வெளிப்படுத்தின. அரசினால் அதிகரிக்கப்பட்டுவரும் சமூக ஊடகங்களின் கருவிமயமாக்கல் மற்றும் மாற்று மற்றும் சிறுபான்மை சொற்பொழிவுகளை ஒடுக்குவதற்கான அரசின் முயற்சி ஆகியவை சமூக ஊடகங்களில் சுவரோவிய அலையின் இந்த பக்கசார்பான பிரதிநிதித்துவத்தை விளக்கிக் கூறலாம். சமூக ஊடகங்களில் வடிவமைக்கப்பட்ட சொற்பொழிவின் பகுப்பாய்வு சமூக ஊடக பயனாளர்கள் தொடர்ந்து தங்களின் சொந்தக் கருத்தியல்கள் மாத்திரம் எதிரொலிக்கக்கூடிய ஒரு வரையறைக்குள் நகர்கின்றனர் என்பதனை வெளிப்படுத்துகிறது. மேலும், வெவ்வேறு கருத்தியல்களுடன் ஒன்றிணைவதற்கான இடத்தை மேலும் குறைகிறது என்பதையும், நாட்டிற்குள் நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான இடத்தை உருவாக்குகிறது என்பதனையும் வெளிப்படுத்துகிறது.

நேர்காணல்கள் அரசின் நிகழ்ச்சி நிரலை அமைப்பதில் கல்வியின் பங்கையும் அதை மாற்றியமைப்பதையும் விவரிக்கின்ற மற்றொரு தரவுத் தொகுப்பிற்கு வழிவகுத்தது. கல்வி என்பது ஆய்வின் எதிர்பார்க்கப்பட்ட திட்டமிடப்பட்ட முடிவு அல்ல என்றாலும், கல்வி மற்றும் அடையாள உருவாக்கத்தில் அதன் பங்கு பற்றி நேர்காணல் செய்யப்பட்டவர்களினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட குறிப்புகள் இந்த ஆய்வுடன் மேலும் சேர்க்கப்பட்டன. நேர்காணலில் பங்குபற்றியவர்களின் கூற்றுப்படி, கல்வி முறையானது சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு இடையில் இன மற்றும் மத பிளவுகளின் அடிப்படையில் பிரிவினைகளை ஏற்படுத்துகிறது. இன மோதல்கள், இன வன்முறை, பாலினம் மற்றும் பாலியல் அடையாளங்கள் மற்றும் அவற்றின் செயல்திறன் ஆகியவற்றின் மூலகாரணங்களின் அடிப்படையில், அரசினால் மேற்கொள்ளப்படும் கல்வி மூலப்பொருட்களின் மையப்படுத்தப்பட்ட உற்பத்தியானது வரலாற்றின் ஒரு தனித்துவக் கதையைத் தொடர்ச்சியாகக் கொண்டுசெல்கிறது. நேர்காணலில் பங்குபற்றியவர்கள் கூறியதைப்போல், அரசினால் நிர்ணயிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி நிரலை மாற்றியமைக்கும் சக்தி கல்விக்கே உள்ளது. அரசினால் நிலைநிறுத்தப்படும் புனையப்பட்ட நினைவுகள் மற்றும் சொற்பொழிவுகளை தகர்த்தெறிவதற்குத் தேவையானது என்னவென்றால் ஒருங்கிணைந்த வரலாறுகளை மீண்டும் கூறுதல் மற்றும் மாற்று வரலாறுகள் மற்றும் கதைகளைக் கற்பித்தல் என்பனவற்றைக்கொண்ட அமைப்பிற்கு கல்வி முறையை சீர்திருத்தம் செய்வதாகும்.

இறுதியாக, 2019-2020 ஆம் ஆண்டுக்கான சுவரோவிய அலையானது, இன தேசியவாதம் மற்றும் சிறுபான்மை சமூகங்களின் கருத்துச் சுதந்திரத்தின் மீதான ஒடுக்குமுறையின் மீது

கட்டமைக்கப்பட்ட போருக்குப் பிந்தைய மேலாதிக்க சொற்பொழிவினை மேலும் மேம்படுத்துவதில் உதவும் அரசின் நிகழ்ச்சி நிரல் அமைப்பைச் செயல்படுத்தியது என்பதனை கல்வி ரீதியான விசாரணை மூலம் இந்த ஆய்வினால் தீர்மானிக்க முடிந்தது. ஒரு சமூகத்திற்கு பக்கச்சார்பாக இருத்தல், மற்றொரு சமூகத்தைவிட ஆதிக்கம் செலுத்தும் சொற்பொழிவுகள் காணப்படுதல் என்பவை இந்த சுவரோவிய அலைக்குள் சமூக ஒற்றுமை, நல்லிணக்கம், அமைதி, பொறுப்புக்கூறல் மற்றும் சகவாழ்வு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் ஊக்குவிக்கவேண்டிய அரசின் இடைவெளியைக் குறைத்துள்ளது.